## கருத்தரங்கக் குழுக்கள்

புரவலர்கள்:

அருள்முனைவர் **பவுல்ராஜ் மைக்கேல்** சே.ச.

அதிபர், தூய வளனார் கல்வி நிறுவனங்கள்

அருள்முனைவர் **கு.அமல்** சே.ச.

செயலர், தூய வளனார் கல்லூரி

அருள்முனைவர் **சி.மரியதாஸ்** சே.ச.

முதல்வர், தூய வளனார் கல்லூரி

முனைவர் **ஜெ. ஜான் லவ் ஜாய்**

புலத்தலைவர், மொழிகள் மற்றும் பண்பாட்டுப் புலம்

| | |
|---|---|
| அமைப்பாளர் : | முனைவர் **ஞா.பெஸ்கி,** தமிழாய்வுத் துறைத்தலைவர் |
| துணைஅமைப்பாளர் : | முனைவர் **சு.சீனிவாசன்** ஒருங்கிணைப்பாளர், தமிழ்த்துறை (பணிமுறை - II) |
| கருத்தரங்கச்செயலர் : | முனைவர் **ஆ.அடைக்கலராஜ்** |
| பொருளர் : | திருமிகு. **இ.யோகராஜ்** |
| பதிப்புக்குழு : | முனைவர் **ஆ.ஜோசப் சகாயராஜ்**<br>முனைவர் **டே.வில்சன்**<br>முனைவர் **ஜா.சலேத்** |
| அமர்வு ஏற்பாட்டுக்குழு : | முனைவர் **ஆ.ராஜாத்தி**<br>திருமிகு. **சி.பாக்கிய செல்வரதி** (துணைமுதல்வர்)<br>முனைவர் **போ.ஜான்சன்** |
| பதிவுக்குழு : | முனைவர் **ரெ.நல்லமுத்து**<br>முனைவர் **இரா.முரளி கிருட்டினன்** |
| உணவுக்குழு : | முனைவர் **ஜா.பெஞ்சமின் ஆரோன் டைட்டஸ்**<br>முனைவர் **கு.அந்தோனிராஜா**<br>முனைவர் **கா.ஜான் கென்னடி** |
| மேடைப் பொறுப்புக்குழு : | முனைவர் **சி.ஷகிலா பானு**<br>முனைவர் **ஆ.மரிய தனபால்**<br>முனைவர் **ம.தனலெட்சுமி** |
| வரவேற்புக் குழு : | முனைவர் **சி.ஆரோக்கிய தனராஜ்**<br>திருமிகு. **டே. எட்வின் சார்லஸ்**<br>முனைவர் **ஜா.ஸ்டெல்லா மேரி** |
| மக்கள் தொடர்புக்குழு : | முனைவர் **லா.சார்லஸ்**<br>திருமிகு. **மா.ராஜா** |

தேசியக் கருத்தரங்கம்

இந்திய அறிவு ஒருங்கில் தமிழின் கொடை

( Contribution of Tamil to Indian Knowledge system)

14 பிப்ரவரி 2025

பெறுநர்


தொடர்பு முகவரி

முனைவர் ஆ. அடைக்கலராஜ்

கருத்தரங்கச் செயலர்.

உதவிப்பேராசிரியர்,தமிழாய்வுத்துறை

தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி - 02

தொலைபேசி : 0431-4226401 அலைபேசி : 9489638722


# தேசியக் கருத்தரங்கம்

## இந்திய அறிவு ஒருங்கில் தமிழின் கொடை

(Contribution of Tamil to Indian Knowledge system)

**14 பிப்ரவரி 2025**

**அறிவிப்பும் அழைப்பும்**





**தமிழாய்வுத்துறை**

**தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி**

(A++ தரத்தகுதியும் செயல்திறன் ஆற்றல் வளத் தனித்தகுதியும் சிறப்புத் தொன்மைத் தகுதியும் பெற்றது)

திருச்சிராப்பள்ளி 620 002.

**இனிய பெருந்தகையீர், வணக்கம்.**

தென்னிந்தியாவில் தமிழ்நாட்டின் மையப்பகுதியில் அமைந்துள்ள திருச்சிராப்பள்ளி மாநகரில் 'உண்மைக்கும் நன்மைக்கும்' என்னும் விருதுவாக்கோடு கல்விவழி மனிதம் மலரச் செய்யும் இலக்குடன் 181 ஆண்டுகள் கல்விப்பணி ஆற்றிவருகிறது தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி. மதுரை மறைமாநில சேசுசபையினரால் நடத்தப்படுகின்ற இக்கல்லூரியே, 2019இல் நடைபெற்ற தேசியத் தர மதிப்பீட்டுக்குழுவின் (நான்காம் சுற்று) மதிப்பீட்டில் A++ தகுதியைப் பெற்ற முதல் கலை மற்றும் அறிவியல் கல்லூரியாகும். தமிழகத்தில் உள்ள கல்லூரிகளுள் பல்கலைக்கழக மானியக்குழுவின் சிறப்புத் தொன்மைத் தகுதியைப் பெற்றுள்ள ஒரே கல்லூரியும் இதுவேயாகும். இத்தகு பெருமைமிகு கல்லூரியில் முன்னோக்கு நிலையிலான பாடத்திட்டத்தைக் கற்பிப்பதிலும், நூல்களை வெளியிடுவதிலும், முனைவர்பட்ட ஆய்வுகளை மேற்கொள்வதிலும் சிறப்புறச் செயல்படுகின்ற தமிழாய்வுத்துறை 28 ஆண்டுகளாகத் தொடர்ந்து ஆண்டுதோறும் காலத்திற்கேற்ற தலைப்புகளில் தேசிய/ பன்னாட்டு/மாநில அளவிலான கருத்தரங்குகளை நடத்துவதும், தொடக்கவிழாவிலே கருத்தரங்க ஆய்வுக்கோவையை வெளியிடுவதுமான மரபைப் பின்பற்றி வருகின்றது. இத்தகைய ஆய்வுப்போக்கினைத் தொடர்ந்து பேணிக்காத்திடும் நோக்கில் **'இந்திய அறிவு ஒருங்கில் தமிழின் கொடை'** என்னும் பொருண்மையில் தேசியக் கருத்தரங்கை 2025ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 14ஆம் நாளில் நடத்துவதற்குத் தமிழாய்வுத்துறை விழைகின்றது.

## கருத்தரங்கின் நோக்கம்

இந்தியத் திருநாடு ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு மேற்பட்ட உயர்ந்த பண்பாட்டுச் செழுமையையும் அறிவுமரபையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இலக்கியம், அறிவியல், கணிதம், மெய்யியல், மருத்துவம், வானவியல் போன்ற பல்வேறு துறைகளில் இந்தியச் சமூகத்தை மட்டுமன்றி உலகளாவிய சிந்தனையையும் இந்திய அறிவு மரபு உரமிட்டு வளர்த்து வந்துள்ளது. இது மனித வாழ்வின் வெவ்வேறு கூறுகளையும் ஒருங்கிணைக்கும் முழுமையான அணுகுமுறையாக அமைந்துள்ளது. உலகையும் அதில் வாழும் அனைத்து உயிர்களையும் ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாகவும் சார்புடையனவாகவும் வலியுறுத்தும் இந்திய அறிவுமரபில், 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று உலகப் பொதுமையைப் பறைசாற்றும் தமிழ்ப்பண்பாடு தனித்ததொரு இடத்தைப் பெற்றுள்ளது.

இத்தகைய அறிவுமரபில் இலக்கிய வளம், இலக்கணச்செழுமை, உலகப்பொதுமைக் கருத்து, பல்சமயப் பங்களிப்பு போன்ற பல்வேறு கூறுகளால் தனித்த சிறப்பைத் தமிழ் பெற்றுள்ளது. தமிழ் மண்ணில் விளைந்த பாமரர்தம் எண்ணக்கிடக்கையாம் வாய்மொழி இலக்கியங்களும், அறிஞர் பெருமக்களின் மனவானில் நாகரிக முதிர்ச்சியாய் வெளிப்படுகின்ற எழுத்திலக்கியங்களும் உயரிய அறிவுமரபை இந்தியத் திருநாட்டிற்கும் உலகத்திற்கும் தொடர்ந்து வழங்கி வந்துள்ளன. இவ்வாறு அறிவியல், சூழலியல், கட்டடக்கலை, ஓவியக்கலை. சிற்பக்கலை, இசைக்கலை, மருத்துவக்கலை, கோயிற்கலை, மெய்யியல், வானவியல், நாடகவியல், வணிகவியல், போரியல், அரசியல், வரலாறு, கல்வியியல், சமூகவியல் போன்ற பல்துறை அறிவை உலகிற்கு வழங்கியுள்ள தமிழின் கொடைத்திறத்தை ஆராய்வதே இக்கருத்தரங்கின் முதன்மை நோக்கமாக அமைகிறது.

## ஆய்வுக்களங்கள்:

தமிழ்நாட்டின் அறிவுச் செழுமையைப் பறைசாற்றுவதோடு, இந்தியஅறிவுமரபுக்கும், உலகளாவிய புதிய துறைகளுக்கும் முன்னோடியாக அமைகின்ற இலக்கண இலக்கியங்களைக் குறித்தே ஆய்வுக்கட்டுரைகள் அமைந்திட வேண்டும். அதாவது தமிழ்நாட்டில் வழங்கிவரும் நாட்டுப்புறக்கதைகள், பாடல்கள், கதைப்பாடல்கள், பழமொழிகள், விடுகதைகள் போன்ற வாய்மொழி இலக்கியங்களும் தொல்பொருள் ஆய்வுகள் உணர்த்தும் மெய்ம்மைகளும் தொல்காப்பியம், நன்னூல் போன்ற இலக்கண நூல்களும் சங்க இலக்கியம் தொடங்கிப் பரந்து விரிந்துள்ள செவ்வியல் இலக்கியங்களும் பிற மரபிலக்கியங்களும் ஆய்வுக்கட்டுரைகள் எழுதப்படுவதற்கான ஆய்வுக் களங்களாக அமையலாம்.

- தொல்காப்பியரின் உயிரியல் சிந்தனைகள்
- தொல்காப்பியத்தில் அகராதியியல் கூறுகள்
- நன்னூலாரின் கல்வியியல் அணுகுமுறைகள்
- சங்க இலக்கியங்களின் பொதுமைநெறி
- சூழலியல் பேணும் எட்டுத்தொகை
- திருக்குறள் உணர்த்தும் தமிழர் மெய்ந்நெறி
- பழந்தமிழரின் மனித உரிமை நோக்கு
- சங்கத்தமிழரின் கட்டடக்கலை
- காலந்தோறும் தமிழர் சிற்பக்கலை
- சித்தர் மரபும் தமிழ் மருத்துவமும்
- பழமொழிகள் உணர்த்தும் அறிவியல் சிந்தனைகள்
- கதைப்பாடல்கள் புலப்படுத்தும் மானுடவியல்
- பயணவியலைச் சித்திரிக்கும் ஆற்றுப்படை
- பட்டினப்பாலை சித்திரிக்கும் பண்டைத்தமிழர் வணிகம்
- சங்கத்தமிழரின் தொழிலியலறிவு
- சங்க இலக்கியத்தில் நீர் மேலாண்மை
- புறநானூறு காட்டும் போரியல் நெறிகள்
- சிலப்பதிகாரம் போற்றும் அரசியல் நெறி
- சிலம்பு முன்வைக்கும் அரங்கவியல் கூறுகள்
- வறுமை ஒழிப்புக்கு வழிகாட்டும் மணிமேகலை
- தமிழ்நாட்டுக் கோயிற்கலை
- பழந்தமிழரின் வானியல் அறிவு
- பண்டைத்தமிழர் வளர்த்த தொடர்பியல்
- தமிழர்தம் மெய்யியல் மரபு
- தமிழர் பண்பாட்டு வரலாற்றைப் பேசும் தொல்பொருள் ஆய்வுகள்
- கீழடி அகழ்வாய்வு காட்டும் பழந்தமிழர் நாகரிகம்
- திணைமரபும் இனவரைவியல் கோட்பாடும்
- தமிழகம் வளர்த்த இசைக்கலை.

(மேற்கண்ட பொருண்மைகளை மாதிரியாகக் கொண்டு ஆய்வாளர்கள் தங்கள் ஆய்வுக்களங்களை அமைத்துக் கொள்ளலாம்.)

## ஆய்வுக்கட்டுரை எழுதும் முறை

கட்டுரைகள் A4 தாளில் எட்டுப் பக்க அளவில் Arial Unicode MS என்னும் ஒருங்குறியீட்டு (Unicode) எழுத்துருவில் மட்டும் ( Font Size 12: Line Space 1.5 ) கணினித்தட்டச்சு செய்து tamilseminarsjc@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 01-02-2025க்கு முன்பாக அனுப்ப வேண்டும்.

ஒவ்வொரு கட்டுரையும் ஆய்வுச் சுருக்கம், திறவுசொற்கள், முன்னுரை ஆகியவற்றைக் கொண்டு தொடங்கப் பெறுதல் வேண்டும். கட்டுரையின் இறுதியில் முடிவுரை, சான்றெண் விளக்கம், துணை நூற்பட்டியல் ஆகியவை இடம்பெறல் வேண்டும்.

கட்டுரைகள் அனைத்தும் தொகுக்கப் பெற்றுக் கருத்தரங்கத் தொடக்க விழாவில் அச்சு வடிவில் நூலாக ISBN எண்ணுடன் வெளியிடப் பெறும்.

| பேராளர் பதிவுக்கட்டணம் |
| --- |
| பேராசிரியர்கள் : ₹ 700/- ஆய்வாளர்கள் :₹ 400/- |

பேராளர்கள் கீழ்க்கண்ட வங்கிக்கணக்கில் தொகையைச் செலுத்திவிட்டுக் கூகுள் படிவத்தின் (Google form) வாயிலாகத் தங்கள் பங்கேற்பைப் பதிவுசெய்திட வேண்டும். தொகை செலுத்தியதற்கான சான்றும் பதிவுப்படிவத்தில் இணைக்கப்பட வேண்டும்.

**கருத்தரங்கக் கட்டணம் செலுத்த இந்த இணைப்பைச் சொடுக்கவும்.** https://seminar.sjctni.edu/Tamil/NC

**பதிவு செய்ய இந்த இணைப்பைச் சொடுக்கவும்.**
https://forms.gle/fgkatpHGuNoRaGCt5